மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.32/2015

2024–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 04–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்தானகிருஷ்ணன் (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.04.10.2024</u>
<u>வா.சா.1</u>
**<u>குறுக்கு விசாரணை :–</u>**

தாவா சொத்து 1வது வாதிக்கு எப்படி பாத்தியம் என்றால் பூர்வீக பாத்தியம் ஆகும். மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 35 செண்ட் ஆகும். இந்த 5 ஏக்கர் 35 செண்டை மூன்று பாகஸ்தர்களாக பிரித்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சின்னுகோனார் மனைவி பெயர் என்ன என்றால் முனியாயி ஆகும். சின்னுகோனாருக்கும், முனியாயிக்கும் ராமு என்ற ராமன், நாகலிங்கம், ராமாயி ஆகியோர் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். வாரிசுகள் மூன்று பேரும் காலமாகிவிட்டார்களா என்றால் இல்லை 2 ஆண்மக்கள் இறந்துவிட்டார்கள் பெண் மக்கள் ராமாயி உயிருடன் இருக்கிறார். சின்னுகோனார் எப்போது காலமானர் என்ற விபரம் எனக்கு தெரியும். சின்னுகோனார் காலமானபின்பு முனியாயி சின்னுகோனாரின் சகோதரரான காளிமுத்து என்பவரை 2வது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து, முனியாயிக்கு குருவம்மாள், நாகலெட்சுமி ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். சின்னுகோனாருக்கு பூர்வீகமாக 15 இலக்க சொத்துக்கள் இருக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சின்னுகோனாருக்கு எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்றால் 7 இலக்க சொத்துக்கள் இருந்தது. தாவா சொத்தின் வடக்கு பகுதியில் பங்காளிகளால் விடபட்ட பாதையும், ஆறுமுகம் கிரையம் பெற்ற நிலமும் இருக்கிறது. சின்னுகோனாரின் பெண் பிள்ளையான ராமாயி என்பவர் ராமன் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி ராமாயி, ராமன் ஆகியோருக்கு முருகேசன், சங்கிலி, ரவி, தேவி, விஜயா, லட்சுமி ஆகியோர் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராமன் என்பவரை திருமணம் செய்து கொண்டார் அவருக்கு மூன்று பிள்ளைகள் பேச்சிமுத்து, சின்னு, முத்துமாரி ஆகியோர் ஆவார்கள். இதில் முத்துமாரி காலமாகி விட்டார்

என்றால் சரிதான். முத்துமாரியின் கணவர் பெயர் முனியராஜ் ஆகும். அவர் பாம்பனில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். முத்துமாரி, முனியராஜ் ஆகியோர் பிள்ளைகள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1ம்வாதி நாகலிங்கம், 2ம் வாதி காளிமுத்துவுக்கு ராமலட்சுமி, பார்வதி, சந்தானகிருஷ்ணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பார்வதி பாம்பனை சேர்ந்த சங்கர் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கடந்த 29.05.2021ம் தேதி பாம்பன் குரூப் சர்வே எண்.641/3C1A1 70 செண்ட் அளவுள்ள நிலத்தினை 1ம் வாதி நாகலிங்கம், 3ம் வாதி நாகலட்சுமி, நானும் சேர்ந்து வடிவேல்என்பவருக்கு இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 479/2020 எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் முனியாயி என்பவரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வாரிசு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் குறிபிடப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 28.08.2003ம் தேதியன்று பாம்பன் குரூப் சர்வே எண்.971/1Aல் 1 ஏக்கர் 85 செண்ட் நிலத்தினை குருவம்மாள், நாகலட்சுமி ஆகிய இருவரும் சேர்ந்து இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 811/2003 எண்ணாக பதிவுசெய்து கொடுத்துள்ளார் அந்த ஆவணத்தில் தெற்குமாலாக கிழமேல் பாதையும், இராமன் நிலமும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் கிழமேல் பாதை இல்லை, ராமன் நிலம் மட்டும். கடந்த 28.12.1983ம் தேதியில் வேலுக்கோனார், சின்னுக்கோனார், குருவம்மாள், நாகலெட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 730/1983 எண்ணாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா எண்.6314ல் உரிமையாளர்கள் பெயர் என்று குருவம்மாள், வேலு, நாகலட்சுமி, ராமன், ராஜீவ்காந்தி, ராஜேந்திரன், அழகர் பெருமாள், நாகராஜன், நாகலிங்கம் ஆகிய 9 நபர்கள் பெயர் கூட்டாக தாக்கலாகி வருகிறது என்றால் சரிதான். அந்த பட்டாவில் 74 ஏர்ஸ் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எத்தனை இலக்க சொத்துக்களை பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரிந்தவரை 7 இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு பதிவு செய்யப்பட்டட ஆவணம் நகல் எடுக்கும்போது அதில் அனைத்து சராம்சங்களும் இருக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தினை நான் தான் எனது பெயரில் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த நகல் போட்டது 15.06.2010ம் தேதி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரையில் 1ம் பிரதிவாதியின் கணவர் அவர் மேஜர் ஆக இருந்தபொழுது எனது தகப்பனார் நாகலிங்கம் மைனராக இருக்கும்போது தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேஜர் ஆக இருந்த ராமனின் அனுபவத்தில் தான் இருந்தது. நான் சொத்தில் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால்

சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாகத்தை கேட்டு அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ.3 ல் என்ன இருக்கிறது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு நான்குஎல்லை மேற்கே சமஸ்தான காட்டுபங்களா, தெற்கே தில்லைமுத்து நாடார், வடக்கே பங்காளிகள் நிலம், கிழக்கே தென்வடல் ரோடு. இதை தவிர நான்குமால் மாறுதலாக அறிவிப்பில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய கொஞ்ச நாட்களில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியை சந்தித்து தவறுதலாக வழககறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டேன் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்ப வேண்டாம் என்று சொன்னதால் அனுப்பவில்லை என்றால் என் தகப்பனார் சந்திக்கவே இல்லை. வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் இந்த வழககிற்கும் சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணமானது பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருப்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 போட்டோவில் உள்ள தார்சு வீடானது 1ம்பிரதிவாதியால் கட்டப்பட்ட வீடாகும். வா.சா.ஆ.8 ஆவணமானது 1ம்பிரதிவாதி அவரது பேரப்பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பதிவு செய்த விபரம் எனக்கு 4 மாதத்திற்கு முன்பு தான் தெரியவந்தது. வா.சா.ஆ.9 வரி ரசீது எங்கிருந்து வாங்கினேன் என்றால் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்து பெற்றேன். அதிலுள்ள கோபுர சீல் கிராம நிர்வாக அலுவலகத்தினரால் குத்தப்பட்டது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் யார் வழங்கினார் என்று சீல் எதுவும் குத்தப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 பட்டா மாறுதல் உத்தரவில் பட்டா எண். 6314 எண்ணிற்கு முன்பாக எந்த பட்டா இருந்தது என்றால் 569 என்று இருந்தது. பிராது சொத்துவிபரத்தில் பழைய பட்டா எண்.569 என்று குறிப்பிட்டு புதிய பட்டா எண்.6314 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பாம்பன் குரூப் சர்வே எண்கள்.971/2, 967/1, 156/4, 153/3, 156/4 ஆகிய சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துககளை பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நிறைய கிரையபத்திரங்கள் ஏற்பட்டுள்ளது அதனை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல ஆதி காலத்தில் இருந்து கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம். கூட்டு அனுபவத்தை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல வீட்டு வரி ரசீது தாக்கல் செய்யவில்லை நிலத்திற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேன். பாகப்பிரிவினை கோரி வழக்க தாக்கல் செய்தால் அனைத்து சொத்துக்களையும் பாகம் கேட்டு தாக்கல்செய்ய வேண்டும ஒரு சொத்தினை மட்டும கேட்டு தாக்கல் செய்யக்கூடாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கண்டுள்ள அனைத்து வாரிசுதாரர்களையும்

முறையாக வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டு என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரையில் ஆதியில் இருந்து 1ம்பிரதிவாதியின் கணவர் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் மட்டும் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம், பிராது வழக்கிற்கு தோதாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.04 16:56:41 +0530